அரசாங்க நிருவாகச் சுற்று நிருப இல. 53/89

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1989, ஒக்டோபர் மாதம் 27 ஆந் திகதி

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
எல்லா அரசாங்கதிபர்களுக்கும்.

போக்குவரத்துச் சேவைகள் வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த வேளையில் தமது கடமைக்கு வருகை தந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்.

1989 ஜூன் மாதம் 12 ஆந் திகதி தொடக்கம் 1989 ஜூலை மாதம் 14 ஆந் திகதி வரை நாட்டில் நிலவிய போக்குவரத்துச் சேவை வேலை நிறுத்தங்களின் போது, பல தடைகளுக்கும் மத்தியில் தமது சேவைக்கு சமுகமளித்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் தமது கடமையில் காட்டிய அக்கறையை கவனத்திற் கொண்டு அதை வரவேற்கும் விதத்தில், வேலை நிறுத்தம் நடைபெற்ற காலத்தில் தான் கடமைக்கு சமுகமளித்த நாட்களின் எண்ணிக்கைக்கு சமனான நாட்களை ஓய்வு விடுமுறைகளாக வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

02. இது சம்பந்தமாக தயவு கூர்ந்து உங்கள் அமைச்சின்/திணைக்களத்தின் கீழ்வரும் நிறுவனங்களுக்கு அறிவிக்கவும்.

ஒப்பம்: (பி. எல். எம். பெர்னாந்து),
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.